**<u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.</u>**

**<u>(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ. /TR / 5 /2 – 5, 06/02/2008 நாளிட்ட )</u>**

**<u>(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)</u>**

**<u>(கடித எண்.த.மி.ஒ.ஆ. / AD(L)/F. அறிவிக்கைகள் / D 163/2003.</u>**

உரிய ஆணையம், மின்கட்டணவீத ஒழுங்குமுறை விதிகளைக் குறித்துரைக்கையில் மின்உற்பத்தி நிறுமங்கள் மற்றும் மின்செலுத்தல் உரிமம்தாரர்களுக்குப் பொருந்தக்கூடிய மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்காக மத்திய ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்ட நெறிமுறைகள் மற்றும் செயல்முறைகளின் மூலம் வழிநடத்தப்படுதல் வேண்டும் என்று 2003ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின் (மத்தியச்சட்டம் 36/2003) 61ஆம் பிரிவின் (a) கூறு கட்டளையிடுவதாலும், மற்றும் 2004ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான வரையறைகள் மற்றும் விதிமுறைகள்) ஒழுங்குமுறைவிதிகள் தேய்மானத்திற்கு எதிரான முன்பணத்திற்கு வகை செய்துள்ளதாலும்,

மற்றும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகளை) குறித்துரைப்பதாலும், மற்றும் அது 2005 ஆகஸ்டு 3ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் (பகுதி VI – பிரிவு 2–பின்னிணைப்பில்) வெளியிடப்பட்டிருப்பதாலும்,

மற்றும் 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளில் “ தேய்மானத்திற்கு எதிரான முன்பணத்திற்கு“ வகை செய்யப்படாதிருப்பதாலும்,

மற்றும், 5, 3, 4 ஆகிய பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதும் 2006 ஜுன் 6 அன்று அறிவிக்கை செய்யப்பட்டதுமான மின்கட்டண வீதக் கொள்கை, மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தேய்மான வீதத்தை அறிவிக்கை செய்துள்ளது மற்றும் 2004ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேய்மான வீதங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதும் 2004 மார்ச் 26 அன்று அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதுமான ஒழுங்குப்படுத்துபவர்கள் மன்றம் 1/20, 61/2006 கடிதத்தில்– 2006 ஜுன் 23ஆம் நாளிட்ட ம.மி.ஒ.ஆ.–த்தின் மின்கட்டண வீதக் கொள்கை, 2004 முதல் 2009 வரையிலான கால அளவிற்கு செல்லத்தக்கதாகும் என்பதாலும்,

மற்றும், 2004ஆம் ஆண்டு மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளுக்கு இணங்க, 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளைத் திருத்தம் செய்வது அவசியமெனக் கருதுவதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும், இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம், (இதன் பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறை விதிகள் என்று குறிப்பிடப்படும்) 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளை பின்வருமாறு திருத்தம் செய்கிறது, அதாவது :–

## 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (ஐந்தாம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள்.

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:

(i) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (ஐந்தாம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள், என்று வழங்கப்பெறும்.

(i) இந்த ஒழுங்குமுறை விதிகள், தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**(2) முதன்மை ஒழுங்குமுறை விதிகளில் புதிய ஒழுங்குமுறை விதி 24- A-ஐப் புகுத்துதல் :–**

முதன்மை ஒழுங்குமுறை விதிகளில், 24ஆம் ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு, பின்வரும் , புதிய ஒழுங்குமுறை விதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

24- A தேய்மானத்திற்கு எதிரான முன்பணம்.

அனுமதிக்கக் கூடிய தேய்மானத்திற்குக் கூடுதலாக, உரிமம்தாரர், இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள முறையில், கணக்கிடப்பட்ட தேய்மானத்திற்கு எதிரான முன்பணம் பெற உரிமையுடையவர் ஆவார்.

தேய்மானத்திற்கு எதிரான முன்பணம் = திருப்பிச் செலுத்தப்பட்ட கடன் தொகை–
தேய்மானம் அதிகபட்சமாகக்
கடன்தொகையின் 10ல்
ஒரு பங்கிற்கு உட்பட்டு பின்னிணைப்பி–
லுள்ள தேய்மானப் பட்டியலின்படி :

ஆனால், தேய்மானத்திற்கு எதிரான முன்பணமானது, அந்த ஆண்டு வரையிலான ஒட்டுமொத்தத் திருப்பிச் செலுத்துகை, அந்த ஆண்டு வரையிலான ஒட்டு மொத்த தேய்மானத்திற்கு மேற்படுமானால் மட்டுமே, அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

ஆனால், மேலும், ஓர் ஆண்டில் தேய்மானத்திற்கு எதிரான முன்பணம் அந்த ஆண்டு வரை ஒட்டுமொத்தக்கடன் திருப்பிச் செலுத்துகைக்கும் ஒட்டுமொத்தத் தேய்மானத்திற்கும் இடையேயான வேறுபாட்டின் அளவிற்கு கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**இரா. பாலசுப்பிரமணியன்,**
செயலாளர்